©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 336] CHENNAI, THURSDAY, SEPTEMBER 15, 2011
Aavani 29, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம்.**

**விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், எலவடி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/5646/2010 உ.இ.(ஊ).]*

**No. VI(2)/457(d-1)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி எலவடி ஊராட்சியில் ஏப்ரல் 2010 முதல் ஆகஸ்ட் 2010 வரை ஊராட்சி கூட்டங்கள் நடைபெற்றதாக, ஊராட்சி தீர்மானப் பதிவேட்டில், பதிவுகள் செய்யப்பட்டிருப்பினும், அக்கூட்டங்களுக்கான கூட்ட அறிவிப்பு சார்வு செய்யாமைக்காகவும், செப்டம்பர் 2010 மாதத்திற்கான கூட்டமும் நடத்தப்படாததற்கும், மேலும், ஊராட்சி செலவினங்களான மின்மோட்டார் காயில் கட்டியது, கையிறைப்பான் உதிரிபாகங்கள் வாங்கியது மற்றும் ஊராட்சி நூலகத்திற்கு தளவாட சாமான்கள் வாங்கியதற்கு உரிய பட்டியல்கள் ஏதும் இல்லாமல், ஊராட்சியால் அனுமதிக்கப்படாத தொகையான ரூ. 98,580/—ஐ (ரூபாய் தொண்ணூற்று எட்டாயிரத்து ஐநூற்று எண்பது மட்டும்) முறைகேடு செய்தமைக்காகவும் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், எலவடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சு. பெரியண்ணன் என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வருகிறது.

**விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், எலவடி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் அ3/5646/2010 உ.இ.(ஊ).]*

**No. VI(2)/457(d-2)/2011.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 206, உட்பிரிவு 11—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி எலவடி ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்களான மின்மோட்டார் காயில் கட்டியது, கையிறைப்பான் உதிரிபாகங்கள் வாங்கியது மற்றும் ஊராட்சி நூலகத்திற்கு தளவாட சாமான்கள் வாங்கியதற்கு உரிய பட்டியல்கள் ஏதும் இல்லாமல், ஊராட்சியால் அனுமதிக்கப்படாத தொகையான ரூ. 98,580/—க்கு (ரூபாய் தொண்ணூற்று எட்டாயிரத்து ஐநூற்று எண்பது மட்டும்) உரிய காசோலைகளில் ஊராட்சி மன்றத் தலைவருடன் கூட்டுக் கையொப்பமிட்டு முறைகேடு செய்தமைக்காக சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், எலவடி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. அ. சின்னதம்பி என்பவரை பதவி நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வருகிறது.

விழுப்புரம்,
2011 செப்டம்பர் 12.

**கா. த. மணிமேகலை,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது